# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.7/2020

Deposition of witness for : PW-10

Name : K. Karthikeyan

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 17th day of November 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாநகரம் அழகாபுரம் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.02.2019 ம் தேதி மாலை 18.00 மணியளவில் சேலம் மாநகரம் அம்மாபேட்டை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பொறுப்பு அலுவலில் இருந்தபோது அம்மாபேட்டை முனிசிபல் காலனியை சேர்ந்த ரமேஸ் என்பவரின் மனைவி விஜயலட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினைப் பெற்று அம்மாபேட்டை

காவல்நிலைய குற்ற எண்.36/2019 ச.பி.302 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.12**. பின்னர் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகாரின் அசல் இரண்டினையும் கனம் நீதித்துறை நடுவர் எண்.5, சேலம் அவர்களுக்கு விரைவு தபால் மூலமாக அனுப்பிவைத்தேன். இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்கு வேண்டி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். அதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

சம்பவ இடம் காவல்நிலையத்தில் இருந்து 30 அடி தூரத்தில் உள்ளது. சம்பவம் 03.02.2019 அன்று பிற்பகல் 03.45 மணியளவில் நிகழ்ந்துள்ளது என்றால் சரிதான். புகாரினை புகார்தாரரே எழுதி எடுத்துவந்தார். முதல் தகவல் அறிக்கை மாலை 06.00 மணியளவில் பதிவு செய்ய துவங்கி 06.45 மணியளவில் முடிக்கப்பட்டது. புகார் பெறுவதற்கு முன்பாக சம்பவம் குறித்து எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்த தேதி நினைவில்லை.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-1 |
| Name | : Vijayalakshi |
| Father's / Husband Name | : W/o. Ramesh |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 17th day of November 2025.

**எதிரி ஆஜர்.**

**குறுக்கு விசாரணை:-**

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை.**

என் வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளிகூடத்தில் லீவ் நாட்களில் நிறைய நபர்கள் விளையாடுவார்கள் என்றாலும் அவ்வாறு விளையாடும் போது பந்து என் வீட்டில் வந்து விழுந்து அதனால் தகராறு நடந்தது என்று சொன்னால் – சரிதான். சம்பவத்திற்கு முன்பு எனது மகன் மேற்படி பள்ளிகூடத்தில் பலமுறை விளையாடும் போது கீழே விழுந்து வந்துள்ளார் என்று சொன்னால் – சரிதான். ஆஜர் எதிரி என் கணவரின் தங்கை மகன். ஆஜர் எதிரியும் என் மகனும் சண்டைபோட்டு கெட்ட வார்த்தைகளால் திட்டி கொள்வார்களா என்றால் – இல்லை.

சம்பவ தினம் மாலை 03.45 லிருந்து 04.45 மணியளவில் நான் சம்பவ இடத்திற்கு சென்று நான் பார்த்தபோது அங்கு போலிசாரும், பொதுமக்களும் இருந்தார்கள். அடிபட்ட என் மகனை போலிஸ் உதவியுடன் ஆட்டோவில் ஏற்றிகொண்டு மருத்துவமனைக்கு சென்றேன்.

மருத்துவர் பரிசோதித்து பார்த்துவிட்டு ஏற்கனவே இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். சம்பவ தினமே மாலை 07.00 மணிக்கு மேல் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேன். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது அங்கு ஆஜர் எதிரி இருந்தார், போலிசார் என்னிடம் காட்டினார்கள். சம்பவதின நள்ளிரவு 01.00 முதல் 02.00 மணிக்குள் என்னிடம் போலிசார் புகாரினை வாங்கினார்கள். என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போலிசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் சொன்னேன். புகாரினை போலிசார் சொல்ல சொல்ல என் கைப்பட எழுதினேன். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கும் மற்றும் முதல் விசாணைக்கும் எதிராக சாட்சியம் அளித்துள்ளதால், பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

கடந்த 03.02.2019 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நெல்சன் பாலாவும் சபரியும் என் வீட்டிற்கு வந்து என் வீட்டின் அருகேயுள்ள மாநகராட்சி பள்ளியில் பரத்குமாரை எனது மகன் தகாத வார்த்தைகளால்

திட்டியதாகவும், பரத்குமார் என் மகனை பிளேடால் குரல்வளையில் மாறி மாறி அறுத்தும் இடது கை மணிக்கட்டு, தாடை, காது ஆகிய இடங்களில் பிளேடால் அறுத்தும், பிறகு ஆறுமுகத்தில் வாயை பொத்தி சுவற்றில் ஓங்கி அடித்து மயங்கி விழுந்தார் என்றும் பிறகு நான் சென்று பார்த்தபோது இரத்த வெள்ளத்தில் என் மகன் கிடந்தார் என்றும் பிறகு ஆட்டோவில் ஜிஹச்சிற்கு எனது மகன் ஆறுமுகத்தை அழைத்து சென்றேன் என்றும் அதுசம்பந்தமாக அம்மாபேட்டை காவல் நிலையத்தில் எழுத்துமூலமான புகார் கொடுத்தேன் என்றும் அதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாணை செய்தார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி தனது உறவினர் என்பதால் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை மறைத்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

மேலும் எதிரியை சம்பவ தினமான 03.02.2019 அன்று இரவு காவல்நிலையத்தில் பார்த்ததாக சொல்லும் சங்கதி பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரி அசா.7 கிராம நிர்வாக அதிகாரியிடம் தாமாக முன்னிலையாகியும், கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படையில் பட்டியல் சாட்சி–31 எதிரியை கைது செய்துள்ளார் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை.**</u> இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.